**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 4 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.141/2024**

<u>CNR.No.TNCB17000175-2024</u>

M. விமல் ஆதித்தன், த/பெ. மகாராஜன்,

இந்து, வயது 69, வசிப்பிடம் 8/27, வாரப்பட்டி,

சுல்தான்பேட்டை அஞ்சல், சூலூர் தாலூக்கா,

கோயம்புத்தூர் 641669 ... **வாதி**

//எதிர்//

1. V. ரேணுகாதேவி, க/பெ. விமல்ராஜ், இந்து,

வயது 40, வசிப்பிடம் 8/115, வாரப்பட்டி,

சுல்தான்பேட்டை அஞ்சல், சூலூர் தாலூக்கா,

கோயம்புத்தூர் 641669.

2. P. விமல்ராஜ், இந்து, வயது 45, வசிப்பிடம் 8/115,

வாரப்பட்டி, சுல்தான்பேட்டை அஞ்சல்,

சூலூர் தாலூக்கா, கோயம்புத்தூர் 641669 ... **பிரதிவாதிகள்**

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ மற்றும் வாரிசுதாரர்களோ வழக்குச் சொத்தின் மீது சட்டப்பூர்வ நடைமுறையின் கீழ் அன்றி எந்த வகையிலும் வாதியை வெளியேற்றக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் - 12.11.2024

வழக்கு மூலமானது 10.12.2022 வாரப்பட்டி கிராமம், சூலூர் தாலுக்கா இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

இவ்வழக்கு அதிகார வரம்பிற்கும் நீதிமன்றக் கட்டணத்திற்கும் தாவா மதிப்பு ரூ.1000/- மதிப்பிடப்பட்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் திருத்தப்பட்டது 1955 பிரிவு 27(c)-ன் கீழ் நீதிமன்ற கட்டணம் ரூ.30/- செலுத்தப்பட்டுள்ளது.

<u>**தாவா மதிப்பீடு**</u>

| | |
|---|---|
| நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரத்திற்கான மதிப்பு | ரூ. 1,000/- |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 27(c)ன் கீழ் நீதிமன்றக் கட்டணம் | ரூ.30/- |

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K. பிரபுராம், அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால், அவர்களை ஒரு தலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்பாணை**</u>

1. பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ மற்றும் வாரிசுதாரர்களோ வழக்குச் சொத்தின் மீது சட்டப்பூர்வ நடைமுறையின் கீழ் அன்றி எந்த வகையிலும் வாதியை வெளியேற்றக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவு தொகை பட்டியல்**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## DESCRIPTION OF PROPERTY

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப்பதிவு வட்டம், சூலூர் தாலூக்கா, வாரப்பட்டி கிராமம், கதவு எண்.8/115 - ல் பாத்தியப்பட்ட இடத்தில் 10 X 10 தெற்கு வாசலாக சிமெண்ட் சீட் போட்டு கட்டப்பட்டுள்ள கட்டிடம் பூராவும் சகிதம். மேற்படி கட்டிடத்தின் மின் இணைப்பு எண்.2543. மேற்படி கட்டிடத்தின் கதவு எண்.8/23

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம்18-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண்.141/2024

தீர்ப்பாணை

நாள்: 18.03.2026